முதன்மை சார்பு நீதிமன்றம். விழுப்புரம்.

OS .No. 123/2021

Witness DW2

| | | | |
|---|---|---|---|
| பெயர்; | பாண்டியன் | மதம் | |
| த.பெ. | மண்ணார் | தொழில்; | |
| ஊர் | ஒதியத்தூர் | வயது | 60 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 09.01.2026 |

இன்று (09.01.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

சத்தியமாகச் சொல்கிறேன்.

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் 3ம் தரப்பினர் ஆவேன். நீதிமன்றத்தில் இருந்து வரபெற்ற சாட்சிய அழைப்பணையின் பேரில் ஆஜராகி உள்ளேன். இந்த வழக்கில் கண்ட பூபதி மற்றும் நதியா மற்றும் ராதா மற்றும் ராதாவின் மகன் ஆதிமூலம் ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆதிமூலத்தின் பாட்டி பவுணம்பாள் எனக்கு தெரியும். ஆதிமூலம் என்பவர் பூபதி என்பவருக்கு 2018 வருடத்தில் மே மாதத்தில் அடமான பத்திரம் எழுதிகொடுத்தது தெரியும். அந்த அடமான பத்திரம் எழுதுவதற்கு முன்பாக ஆதீமூலம் பூபதி மற்றும் நான் ஆகியோர்கள் ஒன்றாக கலந்து பேசினோம்.வீட்டு கடன் இருப்பதால் அது சம்மந்தமாக அடமானம் ஏற்படுத்துவதற்காக பேசினோம். அந்த பேச்சிவார்த்தையின் போது அடமானம் பத்திரத்திற்கு பதிலாக கிரையம் பத்திரம் எழுதிகொடுக்க வேண்டும் என்று கேட்டார். அதன் படி பேசி ஒப்புகொள்ளபட்டது. அந்த கிரைய பத்திரத்தை கடன் அடைந்த பிறகு ரத்து செய்து கொடுப்பதாக வாதி பூபதி ஒப்புகொண்டார். இந்த விபரம் ராதா ஜோதி பவுண்ணம்பாள் ஆகியோருக்கு தெரியாது. ஆதிமூலத்திற்கு மட்டும் தெரியும். அவர்களுக்கு கையெழுத்து போடமாட்டார்கள் அதனால் அவருக்கு தெரிய கூடாது என்று சொன்னார். பூபதி கிராமத்தில் பணம் வட்டிக்கு கொடுத்து வசூல் செய்து வருகிறார். அவ்வாறு கடன் கொடுப்பதற்கு கிரையம் பத்திரம் எழுதி வாங்கி கொள்வது அவருக்கு வழக்கம். எங்கள் ஊரை சேர்ந்த குருமூர்த்தி என்பவருக்கு பூபதி அவ்வாறு கடன் கொடுத்து கிரையம் பத்திரம் எழுதி கொடுத்து கடன் முடிந்த பிறகு கிரையத்தை ரத்து செய்து மீண்டும் குருமூர்த்திக்கு கிரையம் கொடுத்துள்ளார். அந்த குருமூர்த்தி கடன் தீர்த்த போது நானும் ஊர் தலைவரும் பைசல் செய்தோம். அந்த கிரைய பத்திரம் பூபதி

மனைவி பெயரில் ஏற்பட்டது. ஆதிமூலம் என்பவர் பூபதிக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் எழுத போகும் போது நானும் சந்திரசேகர் என்பவரும் போனோம். அங்கு கிரைய பத்திரம் பதிவு செய்துவிட்டு பணத்தை திரும்ப செலுத்தும் போது கிரையத்தை ரத்து ஆதிமூலம் பெயருக்கு கிரையம் ஏற்படுத்தி கொடுக்கிறேன் என்று ஆதிமூலம் சொன்னார். தற்போது என்னிடம் காட்டபடும் வாசா 2 கிரைய பத்திரம் தான் அவ்வாறு ஆதீமூலத்தால் பூபதிக்கு ஏற்படுத்தபட்டது. பத்திரத்தில் ரூபாய் 360000/- மதிப்பு காட்டபட்டுள்ளது. உன்மையில் அந்த சொத்தின் மதிப்பு ரூபாய் 200000 லட்சம் பொரும். வாங்கி கடனுக்கு தகுந்தார்போல் குறைத்து மதிப்பு காட்டி எழுதபட்டுள்ளது. கிரைய பத்திரத்திற்கு பிறகு சொத்து ராதா மற்றும் ஆதீமூலம் என்பவரிடம் உள்ளது. ஆதிமூலத்தின் அம்மா மற்றும் மனைவியும் வசித்து வருகிறார்கள். பத்திரம் எழுதிய பிறகு ஆதீமூலம் லாரி ஓட்டுநர் என்பதால் வெளியூர் சென்றுவிட்டார். சுமார் ஒன்றை அல்லது இரண்டரை வருடமாக அவர் ஊருக்குள் வரவில்லை. ராதா மற்றும் அவருடைய மருமகள் அந்த வீட்டில்தான் தற்போதும் இருந்து வருகிறார்கள். அவர்கள் எப்போதும் வீட்டை காலி செய்யவில்லை. அடமான தொகைக்கு வட்டி கொடுத்து இருப்பதாக கேள்விபட்டேன் ஆனால் நேரடியாக தெரியாது. நான் ஆதிமூலம் எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தில் 2 வது சாட்சியாக உள்ளேன். 1 வது சாட்சியாக சந்திரகேசர் என்பவர் கையெழுத்து போட்டுள்ளார். பத்திரம் எழுதிய போது வாதி பிரதிவாதிக்கு பணம் ஏதும் கொடுக்கவில்லை. நான் ஆதிமூலம் வாதி பூபதி ஆகியோர்கள் அடமான பத்திரத்திற்கு பதிலாக கிரையம் பத்திரமாக எழுதிகொடுக்கவேண்டும் என்று எங்களுக்குள் பேசிய விபரம் கிரைய பத்திரத்தின் 1 வது சாட்சி சந்திரசேகர் என்பவருக்கு தெரியாது. இந்த பத்திரத்தில் கண்டுள்ள வீடு திருவண்ணாமலை பிரதான சாலையில் உள்ளது. இதன் பிறகு வழக்கு சம்மந்தமாக பைசல் செய்கிறேன் என்று பேசபட்டது பூபதி தனக்கு வட்டி அசல் கொடுத்தால் போதும் என்று சொன்னார். அதன் பிறகு ஆதீமூலம் கடன் அடமான தெகையை பைசல் செய்ய வந்தால் அதற்குள் வழக்கு ஏற்பட்டுவிட்டதால் பைசல் செய்யவில்லை. பூபதி எங்கள் ஊர்காரர் ஆனால் எனது உறவினர் அல்ல. கடனை திருப்பி கொடுத்துவிட்டால் ஆதிமூலத்தின் பெயரில் பூபதி கிரையம் எழுதி கொடுத்துவிடுவதாக சொன்னதால்தான் ்அந்த கிரைய பத்திரத்தில் நான் கையெழுத்து போட்டேன். வழக்கில் சாட்சி சொல்ல வாதி பூபதி என்னை அழைத்தார். அடமான பத்திரம் என்று கையெழுத்து வாங்கிவிட்டு ராதா அவர்கள் வீட்டை காலி செய்யவேண்டும் என்று வாதி சொன்னதால் அவர் அழைத்தற்கு செல்லவில்லை. ஆதிமூலம் தற்போது கடனை பைசல் செய்ய உள்ளதாக என்னிடம் சொன்னார். ஆதிமூலம் கிரையம் கொடுப்பதாக அந்த பத்திரத்தை எழுதவில்லை.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

S/d/- A. Tamilselvan

Principal Subordinate Judge,

Villupuram